# வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 23.8.2024 நேரம் மாலை 6.10 மணி

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, போலந்து பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, உக்ரைன் சென்றுள்ளார்.

விண்வெளித் துறையில் மட்டுமின்றி, நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியிலும், **இஸ்ரோ** முக்கிய பங்களிப்பு செய்திருப்பதாக, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

மத்திய அரசின் எல்லாத் திட்டங்களும், பழங்குடி மக்கள் அனைவருக்கும். முழுமையாக சென்று சேர்வதை உறுதிப்படுத்த, மத்திய அரசு. **ஜன்-மன்** இயக்கத்தை தொடக்கி உள்ளது.

புதுச்சேரியில் குரங்கம்மை நோயில் இருந்து மக்களை பாதுகாக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

## மோடி

பிரதமர் திரு நரேந்திர மோடி, போலந்து பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, உக்ரைன் சென்று சேர்ந்துள்ளார். போலந்தில் இருந்து ரயில் மூலம் கீவ் நகருக்கு வந்து சேர்ந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, அங்குள்ள இந்திய சமூகத்தினர் அன்பான வரவேற்பு அளித்தனர். கீவ் நகரின் தேசிய அருங்காட்சியகத்தில், குழந்தைத் தியாகிகள் பற்றிய மல்டி மீடியா கண்காட்சியை பிரதமர் திரு நரேந்திர மோடி பார்வையிட்டு, உக்ரைன் பிரச்சனையின் போது உயிர் நீத்த குழந்தைகளின் நினைவிடத்தில், பொம்மை ஒன்றை வைத்து அஞ்சலி செலுத்தினார். உக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி-யும் உடன் இருந்தார். முன்னதாக கீவ் நகரின் மையத்தில் ஃபோமின் தோட்டத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி மலர் அஞ்சலி செலுத்தினார். இன்றைய தினம் உக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி-யை இருதரப்பு ரீதியில் அவர் சந்திக்கிறார். வர்த்தகம், பொருளாதாரம், வேளாண்மை, உள்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, கலாச்சாரம், மக்கள் நிலையிலான தொடர்புகள் உட்பட இருதரப்பு உறவுகளின் அனைத்து அம்சங்களையும் இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளனர். அதிபர் ஜெலன்ஸ்கி-யுடன் ஏற்கனவே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை மேலும் முன்னெடுத்துச் சென்று இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும், உக்ரைன் பிரச்சனைக்கு அமைதி வழியில்

தீர்வு காண்பதற்கான பார்வைகளை பகிர்ந்து கொள்ளவும், தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக, புறப்பாட்டுச் செய்தியில் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இந்தியாவிற்கும் உக்ரைன் நாட்டிற்கும் இடையிலான தூதரக உறவுகள். 1992-ஆம் ஆண்டு தொடங்கியது முதல் இந்திய பிரதமர் ஒருவர் உக்ரைன் செல்வது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத் தக்கது.

## விண்வெளி தினம்

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம், விண்வெளித் துறையில் மட்டுமின்றி, நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியிலும் முக்கிய பங்களிப்பு செய்திருப்பதாக, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், முதலாவது தேசிய விண்வெளி தின விழாவில் உரையாற்றிய அவர், விண்வெளித் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களால் சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு, எரிசக்தி, தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளும் பயன்பெறுவதாக தெரிவித்தார். விண்வெளி ஆராய்ச்சிகளால், மனித குலத்தின் செயல்பாட்டு திறன் அதிகரித்து இருப்பதாகவும், விண்வெளி ஆராய்ச்சிகள் பிரபஞ்சத்தின் ரகசியங்களை, மனிதனுக்கு வெளிப்படுத்தி,

கற்பனைகளை நிஜமாக்கி இருப்பதாகவும், அவர் கூறினார். சந்திரயான் விண்கலம் நிலவில் தரையிரங்கியது இந்தியர்கள் அனைவருக்கும், மகத்தான ஒரு தருணம் என்றும், அதே ஆகஸ்டு 23-ஆம் தேதியை தேசிய விண்வெளி தினமாக கொண்டாடுவது பாராட்டத் தகுந்த நடவடிக்கை என்றும் குடியரசு தலைவர் குறிப்பிட்டார். இந்திய விண்வெளித் துறை வளர்ச்சியில், மங்கள்யான் முதல், ஒரே நேரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட செயற்கை கோள்களை விண்ணில் செலுத்தியது வரை, பல்வேறு அசாதாரண சாதனைகள் அடங்கி இருப்பதாகவும் அவர் கூறினார். 2030-ஆம் ஆண்டிற்குள், விண்வெளி திட்டங்களை, விண்வெளியில் எச்சங்களை விட்டு வராத திட்டங்களாக மாற்ற இஸ்ரோ விஞ்ஞானிகள் முயன்று வருவதையும் அவர் பாராட்டினார். விண்வெளித் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், 70 ஆண்டு காலமாக நாமே போட்டுக் கொண்ட திரையின் பின்னால் ரகசியமாக செயல்பட்டதால் வளர்ச்சி குன்றி இருந்த விண்வெளித் துறையை, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசுதான், பழைய கட்டுப்பாடுகளில் இருந்து, விடுவித்து இருப்பதாக கூறினார். தேசிய விண்வெளி தினம் இன்று பல்வேறு அரசுத் துறைகள், அமைச்சகங்கள், கல்வி நிறுவனங்கள், அறிவியல் அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்களால் மிகுந்த உற்சாகத்துடன்

கொண்டாடப்படுவதாக இஸ்ரோ தலைவர் டாக்டர் சோம்நாத் தமது உரையில் கூறினார். இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் நடத்திய ரோபோட்டிக்ஸ் சவால், மற்றும், பாரதீய அந்தரிக்ஸ் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, விழாவின் போது பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

## விண்வெளி-சென்னை

சென்னையில், ரஷ்ய விண்வெளி வீரர் **செர்கி கோர்சகோவ்**, கஜகஸ்தான் விண்வெளி வீரர் **அய்டின் அய்ம்பெடோவ்** ஆகியோரின் பங்கேற்புடன், தேசிய விண்வெளி தினம் இன்று கொண்டாடப்பட்டது. குழந்தைகளிடையே விண்வெளி ஆர்வத்தை வளர்க்கும் நோக்கத்திலான, Space Kidz India அமைப்பின் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, விண்வெளிக்கு செல்வோம் என்னும் நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. எதிர்காலம் குழந்தைகளுக்கு உரியது என்றும், வானம் கூட, சாதனைகளுக்கு எல்லை அல்ல என்றும் விண்வெளி வீரர் **கோர்சகோவ்** கூறினார். நிலவுக்கான இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலத்தின் வெற்றியையும், விண்வெளி சாகசங்களில் இந்தியாவின் உறுதிப்பாட்டையும் அவர் பாராட்டினார்.

## மோடி-மகாராஷ்டிரா

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 25-ஆம் தேதி மகாராஷ்டிர மாநிலம் ஜல்காமிற்கு பயணம் மேற்கொண்டு, 1 லட்சம் ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் ஈட்டக் கூடிய 11 லட்சம் **லட்சாதிபதி சகோதரி**களுக்கு சான்றிதழ் வழங்குகிறார். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி, மற்றும், 5 ஆயிரம் கோடி ரூபாய் கடன் உதவிகளையும், பிரதமர் இந்நிகழ்ச்சியின் போது விடுவிக்கிறார். மாநிலத் தலைநகரங்கள் மாவட்ட தலைநகரங்கள் உட்பட, 34 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 30 ஆயிரம் இடங்களில் இருந்து, மகளிர் சுய உதவிக் குழுவினர் மெய்நிகர் முறையில் இந்நிகழ்ச்சியில் இணைய உள்ளனர். நாட்டில் ஏற்கனவே 1 கோடிக்கும் மேற்பட்ட பெண்கள், லட்சாதிபதி தீதிக்களாக மேம்பட்டு இருப்பதாக, மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. தத்தம் குடும்பங்களை வறுமையில் இருந்து மீட்டுள்ள இத்தகைய லட்சாதிபதி சகோதரிகளின் எண்ணிக்கையை, அடுத்த 3 ஆண்டுகளில் 3 கோடியாக உயர்த்தவும் அமைச்சகம் இலக்கு நிர்ணியித்துள்ளது.

# இயக்கம்

மத்திய அரசின் எல்லாத் திட்டங்களும், பாதிப்பு வாய்ப்பு அதிகம் உள்ள பழங்குடி மக்கள் அனைவருக்கும். முழுமையாக சென்று சேர்வதை உறுதிப்படுத்தும் வகையில் மத்திய அரசு. பிரதமரின் ஜன்-மன் என்னும் செய்தி-கல்வி-தகவல் தொடர்பு இயக்கம் ஒன்றை தேசிய அளவில் தொடக்கி உள்ளது. நாட்டின் 200-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில், பழங்குடி மக்கள் அதிகம் உள்ள சுமார் 29 ஆயிரம் வாழ்விடங்களில் அடுத்த மாதம் 10-ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த இயக்கத்தின் போது, மொத்தம் 44.6 லட்சம் தனி நபர்களை அதிகாரிகள் சென்றடைந்து, கல்வி உதவி, மகப்பேற்றுக்கால உதவி, கிசான் சம்மான் நிதி போன்ற எல்லா உதவிகளும், பழங்குடி மக்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்துவார்கள் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கான அடிப்படைத் தேவையாக, ஜாதி சான்றிதழ், ஆதார் அட்டை, மற்றும் ஜன்தன் வங்கி கணக்குகள் பழங்குடி மக்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமரின் ஜன்தன் இயக்கத்தின் கீழ் வரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இந்த இயக்கத்திற்கான ஏற்பாடுகள் குறித்தும், மத்திய பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சர் திரு ஜுயல் ராம் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தி உள்ளார்.

## மருந்து

வலி நிவாரணி, ஆன்டி-பயாட்டிக் மற்றும் மல்டி- விட்டமின் உட்பட சில மருந்துகளின் பயன்பாட்டினால் உடல் நலத்திற்கு பாதிப்பு ஏற்படலாம் என மறு ஆய்வில் தெரிய வந்ததைத் தொடர்ந்து, மத்திய அரசு, இத்தகைய 156 மருந்துகளுக்கு தடை விதித்துள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட மருந்துகள் அடங்கிய கூட்டு மருந்துகளும் இதில் அடங்கும். இத்தகைய மருந்துகளால், நேயாளிகளுக்கு நன்மையை விட தீமையே அதிகம் என்றும், மருந்துகள் பற்றிய தொழில் நுட்ப ஆலோசனை வாரியம், மற்றும், அரசால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் ஆய்வுகளுக்கு பின்னர் இம்முடிவு எடுக்கப் பட்டுள்ளதாகவும், மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## குரங்கம்மை

புதுச்சேரியில் குரங்கம்மை நோயில் இருந்து மக்களை பாதுகாக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. அனைத்து மருத்துவர்கள். செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் முன்நிலை சுகாதார ஊழியர்கள் குரங்கம்மை பற்றிய தகவல் பகிரப் பட்டு, நோய் காரணிகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மே-31-ஆம் தேதி நிலவரப்படி இந்தியாவில் குரங்கம்மை பாதிப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்றாலும், நோய் பதிவாகி உள்ள ஆப்பிரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று திரும்பிய 21 நாட்களுக்குள் காய்ச்சல், தலைவலி, உடல்வலி மற்றும் நெரிக்கட்டி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் சிகிச்சை பெறுதல் அவசியம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நோயாளிகளை தனிமைப் படுத்துதல் அவர்கள் பயன்படுத்திய பொருட்களை தொடாமல் தவிர்த்தல், கை சுகாதாரத்தை நன்கு பராமரித்தல் மற்றும் நோயாளிகளின் பராமரிப்பில் பாதுகாப்பு உபகரணங்களை பாதுகாப்பதன் மூலம் குரங்கம்மை பரவாமல் தடுக்க முடியும் என்றும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

## இலங்கை-இந்தியா

இலங்கையின் **மதுரு ஓயா** நகரில் உள்ள ராணுவ பயிற்சி பள்ளியில், இந்தியாவிற்கும்-இலங்கைக்கும் இடையிலான மித்ர சக்தி என்னும், 10-ஆவது கூட்டு ராணுவ பயிற்சியின் இறுதிப் பகுதி நிகழ்வுகளை, இன்று, இலங்கைக்கான இந்திய தூதர் திரு சந்தோஷ் ஜா, இலங்கை அரசின் பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் திரு பிரேமித்த தென்னக்கூன்

ஆகியோர் இணைந்து பார்வையிட்டனர். கூட்டுப் பயிற்சியில் கலந்து கொண்ட இந்தியக் குழுவினருடன் திரு ஜா கலந்துரையாடினார்.

## அபராதம்

உரிய தகுதி இல்லாத ஊழியர்கள் மூலம் விமானங்களை இயக்கியதற்காக ஏர்-இண்டியா நிறுவனத்திற்கு, 90 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து, மத்திய சிவில் விமான போக்குவரத்து இயக்குனரகம் உத்தரவிட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பணிகளுக்கு பொறுப்பான ஏர்-இண்டியா இயக்குநருக்கு 6 லட்சம் ரூபாயும், பயிற்சி துறை இயக்குநருக்கு 3 லட்சம் ரூபாயும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபோல மீண்டும் நடக்காமல் பார்த்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட விமான ஓட்டிக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஏர் இண்டியா நிறுவனம் கடந்த மாதம் தானாகவே முன்வந்து தாக்கல் செய்த அறிக்கை ஒன்றின் மூலம், இந்த சம்பவம் குறித்து சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகத்திற்கு தெரிய வந்தது. இயக்குநரகம் இது குறித்து மேற்கொண்ட விசாரணைகளில் பயணிகளின் பாதுகாப்பிற்கு எதிராக இத்தகைய மேலும் பல விதி மீறல்கள் வெளிப்பட்டதைத் தொடர்ந்து அபராத நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நோட்டீஸ்

ஆந்திர மாநிலம் அனகாபள்ளி மாவட்டத்தில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றில் ரசாயன உலை வெடித்ததால் ஏற்பட்ட விபத்தில் தொழிலாளர்கள் பலியானது குறித்து, தேசிய மனித உரிமைகள் ஆணையம், மாநில அரசின் தலைமைச் செயலருக்கும், காவல்துறை தலைவருக்கும் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. சம்பந்தப்பட்ட தொழிற்சாலையில் பாதுகாப்பு விதிகள் மற்றும் நடைமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டதா என்பதையும் அதிகாரிகள் இதை முறையாக மேற்பார்வை செய்தார்களா என்பதையும் முழுமையாக விசாரித்து 2 வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நோட்டீசில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கான இழப்பீடு, காயமடைந்தவர்களுக்கான மருத்துவ சிகிச்சை மற்றும் சம்பவம் பற்றிய வழக்கின் நடப்பு நிலை குறித்தும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் அறிக்கை கோரி உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, போலந்து பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, உக்ரைன் சென்றுள்ளார்.

விண்வெளித் துறையில் மட்டுமின்றி, நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியிலும், **இஸ்ரோ** முக்கிய பங்களிப்பு செய்திருப்பதாக, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

மத்திய அரசின் எல்லாத் திட்டங்களும், பழங்குடி மக்கள் அனைவருக்கும். முழுமையாக சென்று சேர்வதை உறுதிப்படுத்த, மத்திய அரசு. **ஜன்-மன்** இயக்கத்தை தொடக்கி உள்ளது.

புதுச்சேரியில் குரங்கம்மை நோயில் இருந்து மக்களை பாதுகாக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------